ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவாய்ப்பாடி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவாய்ப்பாடி

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ॥ **1.1.12** ॥

## பெரியாழ்வார் திருமொழி – வண்ணமாடங்கள்

ஓடுவார் விழுவார் ⋆
உகந்தாலிப்பார் ⋆
நாடுவார் நம்பிரான் ⋆
எங்குற்றான் என்பார் ⋆
பாடுவார்களும் ⋆
பல் பறை கொட்டநின்று ⋆
ஆடுவார்களும் ⋆
ஆயிற்றாய்ப் பாடியே ॥ **1.2.2** ॥

உறியை முற்றத்து ⋆
உருட்டி நின்றாடுவார் ⋆
நறு நெய் பால் தயிர் ⋆
நன்றாகத் தூவுவார் ⋆
செறிமென் கூந்தல் ⋆
அவிழத் திளைத்து ⋆
எங்கும் அறிவழிந்தனர் ⋆
ஆய்ப்பாடி ஆயரே ॥ **1.2.4** ॥

## பெரியாழ்வார் திருமொழி – அரவணையாய்

தீய புந்திக் கஞ்சன் உன்மேல் ⋆
சினம் உடையன் சோர்வு பார்த்து ⋆
மாயந் தன்னால் வலைப் படுக்கில் ⋆
வாழகில்லேன் வாசுதேவா ! ⋆
தாயர் வாய்ச்சொல் கருமம் கண்டாய் ⋆
சாற்றிச் சொன்னேன் போகவேண்டா ⋆
ஆயர் பாடிக்கணி விளக்கே ! ⋆
அமர்ந்து வந்தென் முலை உணாயே ‖ **2.2.5** ‖

## பெரியாழ்வார் திருமொழி – போய்ப்பாடு

முலை ஏதும் வேண்டேன் என்றோடி ⋆
நின் காதில் கடிப்பைப் பறித்தெறிந்திட்டு ⋆
மலையை எடுத்து மகிழ்ந்து கல் மாரி காத்துப் ⋆
பசுநிரை மேய்த்தாய் ⋆
சிலை ஒன்றிறுத்தாய் ! திரிவிக்கிரமா ! ⋆
திருவாயர் பாடிப் பிரானே ! ⋆
தலை நிலாப் போதே உன் காதைப் பெருக்காதே ⋆
விட்டிட்டேன் குற்றமே அன்றே ‖ **2.3.7** ‖

## பெரியாழ்வார் திருமொழி – தன்னேராயிரம்

தாய்மார் மோர் விற்கப் போவர் ⋆
தகப்பன்மார் கற்றா நிரைப் பின்பு போவர் ⋆
நீ ஆய்ப்பாடி இளங்கன்னிமார்களை ⋆
நேர் படவே கொண்டு போதி ⋆
காய்வார்க்கென்றும் உகப்பனவே செய்து ⋆
கண்டார் கழறத் திரியும் ⋆

ஆயா ! உன்னை அறிந்து கொண்டேன் ⋆
உனக்கஞ்சுவன் அம்மம் தரவே ॥ **3.1.9** ॥

## பெரியாழ்வார் திருமொழி – அஞ்சனவண்ணனை

பற்று மஞ்சள் பூசிப் ⋆
பாவை மாரொடு பாடியில் ⋆
சிற்றில் சிதைத்தெங்கும் ⋆
தீமை செய்து திரியாமே ⋆
கற்றுத் தூளியுடை ⋆
வேடர் கானிடைக் கன்றின் பின் ⋆
எற்றுக்கென் பிள்ளையைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ॥ **3.2.2** ॥

வண்ணக் கருங்குழல் ⋆
மாதர் வந்தலர் தூற்றிடப் ⋆
பண்ணிப் பல செய்து ⋆
இப் பாடி எங்கும் திரியாமே ⋆
கண்ணுக்கினியானைக் ⋆
கான் அதரிடைக் கன்றின் பின் ⋆
எண்ணற்கரியானைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ॥ **3.2.4** ॥

மிடறு மெழும் எழுத்தோட ⋆
வெண்ணெய் விழுங்கிப் போய் ⋆
படிறு பல செய்து ⋆
இப்பாடி எங்கும் திரியாமே ⋆
கடிறு பல திரி ⋆
கான் அதரிடைக் கன்றின் பின் ⋆

இடற என் பிள்ளையைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ॥ **3.2.6** ॥

## பெரியாழ்வார் திருமொழி – தழைகளும்

‡ விண்ணின் மீதமரர்கள் விரும்பித் தொழ ⋆
மிறைத்தாயர் பாடியில் வீதியூடே ⋆
கண்ணன் காலிப் பின்னே எழுந்தருளக் கண்டு ⋆
இள ஆய்க் கன்னிமார் காமுற்ற வண்ணம் ⋆
வண்டமர் பொழில் புதுவையர் கோன் ⋆
விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும் ⋆
பண் இன்பம் வரப் பாடும் பத்தர் உள்ளார் ⋆
பரமான வைகுந்தம் நண்ணுவரே ॥ **3.4.10** ॥

## பெரியாழ்வார் திருமொழி – நாவலம்

புவியுள் நான் கண்டதோர் அற்புதம் கேளீர் ⋆
பூணி மேய்க்கும் இளங்கோவலர் கூட்டத்தவையுள் ⋆
நாகத்தணையான் குழல் ஊத ⋆
அமரலோகத்தளவும் சென்றிசைப்ப ⋆
அவியுணா மறந்து வானவர் எல்லாம் ⋆
ஆயர் பாடி நிறையப் புகுந்தீண்டி ⋆
செவி உணாவின் சுவை கொண்டு மகிழ்ந்து ⋆
கோவிந்தனைத் தொடர்ந்தென்றும் விடாரே ॥ **3.6.7** ॥

## ஆண்டாள் அருளிச்செய்த – திருப்பாவை

‡ மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால் ⋆
நீராடப் போதுவீர் போதுமினோ நேர் இழையீர் ⋆
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் ⋆

கூர் வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன் ⋆
ஏரார்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம் ⋆
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான் ⋆
நாராயணனே நமக்கே பறை தருவான் ⋆
பாரோர் புகழப் படிந்தேலோர் எம் பாவாய் ‖ **1** ‖

## நாச்சியார் திருமொழி – மற்றிருந்தீர்

நாணி இனி ஓர் கருமம் இல்லை ⋆
நால் அயலாரும் அறிந்தொழிந்தார் ⋆
பாணியாதென்னை மருந்து செய்து ⋆
பண்டு பண்டாக்க உறுதிர் ஆகில் ⋆
மாணி உருவாய் உலகளந்த ⋆
மாயனைக் காணில் தலை மறியும் ⋆
ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டில் ⋆
ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின் ‖ **12.2** ‖

## நாச்சியார் திருமொழி – கண்ணனென்னும்

ஆரே உலகத்தாற்றுவார் ⋆
ஆயர் பாடி கவர்ந்துண்ணும் ⋆
காரேறுழக்க உழக்குண்டு ⋆
தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை ⋆
ஆராவமுதம் அனையான் தன் ⋆
அமுத வாயில் ஊறிய ⋆
நீர் தான் கொணர்ந்து புலராமே ⋆
பருக்கி இளைப்பை நீக்கீரே ‖ **13.4** ‖

‡ அல்லல் விளைத்த பெருமானை ⋆
ஆயர் பாடிக்கணி விளக்கை ⋆
வில்லி புதுவை நகர் நம்பி ⋆
விட்டுசித்தன் வியன் கோதை ⋆
வில்லைத் தொலைத்த புருவத்தாள் ⋆
வேட்கை உற்றுமிக விரும்பும் ⋆
சொல்லைத் துதிக்க வல்லார்கள் ⋆
துன்பக் கடலுள் துவளாரே ॥ **13.10** ॥

## நாச்சியார் திருமொழி – பட்டி மேய்ந்து

அனுங்க என்னைப் பிரிவு செய்து ⋆
ஆயர் பாடி கவர்ந்துண்ணும் ⋆
குணுங்கு நாறிக் குட்டேற்றைக் ⋆
கோவர்த்தனனைக் கண்டீரே ⋆
கணங்களோடு மின் மேகம் ⋆
கலந்தாற் போல் வனமாலை ⋆
மினுங்க நின்று விளையாட ⋆
விருந்தா வனத்தே கண்டோமே ॥ **14.2** ॥

## பெரிய திருமொழி – கொங்கலர்ந்த

பார்த்தற்காய் அன்று பாரதம் கை செய்திட்டு ⋆
வென்ற பரஞ்சுடர் ⋆
கோத்தங்காயர் தம் பாடியில் ⋆
குரவை பிணைந்த எம் கோவலன் ⋆
ஏத்துவார் தம் மனத்துள்ளான் ⋆
இடவெந்தை மேவிய எம் பிரான் ⋆

தீர்த்த நீர்த் தடம் சோலை சூழ் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ॥ **1.8.4** ॥

## பெரிய திருமொழி – வெருவாதாள்

பூண் முலை மேல் சாந்தணியாள் ⋆
பொரு கயல் கண் மை எழுதாள் பூவை பேணாள் ⋆
ஏண் அறியாள் எத்தனையும் ⋆
எம் பெருமாந் திருவரங்கம் எங்கே என்னும் ⋆
நாண்மலராள் நாயகனாய் ⋆
நாம் அறிய ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி ⋆
ஆண் மகனாய் என் மகளைச் செய்தனகள் ⋆
அம்மனைமீர் ! அறிகிலேனே ॥ **5.5.5** ॥

## பெரிய திருமொழி – கையிலங்கு

அம் பொன் ஆர் உலகம் ஏழும் அறிய ⋆
ஆய்ப்பாடி தன்னுள் ⋆
கொம்பனார் பின்னை கோலம் ⋆
கூடுதற்கேறு கொன்றான் ⋆
செம் பொன் ஆர் மதிள்கள் சூழ்ந்த ⋆
தென் திருப்பேருள் மேவும் ⋆
எம் பிரான் நாமம் ⋆
நாளும் ஏத்தி நான் உய்ந்த ஆறே ॥ **5.9.8** ॥

## பெரிய திருமொழி – மானமரும்

தந்தை தளை கழலத் ⋆
தோன்றிப் போய் ⋆
ஆய்ப்பாடி நந்தன் குல மதலையாய் ⋆

வளர்ந்தான் காண் ஏடீ ⋆
நந்தன் குல மதலையாய் வளர்ந்தான் ⋆
நான்முகற்குத் தந்தை காண் ⋆
எந்தை பெருமான் காண் சாழலே ‖ **11.5.2** ‖

ஆழ் கடல் சூழ் வையகத்தார் ⋆
ஏசப் போய் ⋆
ஆய்ப்பாடித் தாழ் குழலார் வைத்த ⋆
தயிர் உண்டான் காண் ஏடீ ⋆
தாழ் குழலார் வைத்த ⋆
தயிர் உண்ட பொன் வயிறு ⋆
இவ்வேழ் உலகும் உண்டும் ⋆
இடம் உடைத்தால் சாழலே ‖ **11.5.3** ‖

அறியாதார்க்கு ⋆
ஆன் ஆயன் ஆகிப் போய் ⋆
ஆய்ப்பாடி உறி ஆர் நறு வெண்ணெய் ⋆
உண்டுகந்தான் காண் ஏடீ ⋆
உறி ஆர் நறு வெண்ணெய் ⋆
உண்டுகந்த பொன் வயிற்றுக்கு ⋆
எறி நீர் உலகனைத்தும் ⋆
எய்தாதால் சாழலே ‖ **11.5.4** ‖

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

ஆழி நீர்
ஆரால் கடைந்திடப் பட்டது ⋆
அவன் காண்மின் ஊரா நிரை மேய்த்துலகெல்லாம் உண்டுமிழ்ந்தும் ⋆
ஆராத தன்மையனாய் ஆங்கொருநாள் ஆய்ப்பாடி ⋆

சீரார் கலையல்குல் சீரடிச் செந்துவர் வாய் ⋆
வாரார் வனமுலையாள் மத்தாரப் பற்றிக் கொண்டு ⋆
ஏரார் இடை நோவ எத்தனையோர் போதுமாய் ⋆
சீரார் தயிர் கடைந்து வெண்ணை திரண்டதனை ⋆
வேரார் நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு ⋆
நாரார் உறியேற்றி நன்கமைய வைத்ததனை ⋆
போரார் வேற்கண் மடவாள் போந்தனையும் பொய் உறக்கம் ⋆
ஓராதவன் போல் உறங்கி அறிவுற்று ⋆
தாரார் தடம் தோள்கள் உள் அளவும் கை நீட்டி ⋆
ஆராத வெண்ணை விழுங்கி ‖ **13** ‖

**திரு ருக்மிணீ சத்யபாமா சமேத நவமோகன க்.ர்ச்ணன் திருவடிகளே சரணம்**